சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள்: 10.02.2026

வா.சா.1– செல்லக்கண்ணு என்ற செல்லக்கண்ணன் என்ற கண்ணன் S/o சின்னச்சாமி

O.S. No.371/2022 மற்றும் எதிர்கோரிக்கை வழக்கில்(பிரதிவாதி)

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

**5** முதல் **9** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**:**

மாணிக்கத்தின் குழந்தைகள் தான் 1 முதல் 4 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 5 முதல் 9 பிரதிவாதிகள் தான் அய்யங்காளையின் வாரிசுகள் என்றால் சரிதான். கருப்பணின் வாரிசுகள் தான் 10 முதல் 13 பிரதிவாதிகள் என்றால் சரிதான். மாணிக்கம், அய்யங்காளை,கருப்பணன் ஆகியோரின் வாரிசுகள் சின்னசாமி மூலமாக அவர்களுக்கு கிடைத்த பல சொத்துக்களை விற்றிருக்கிறார்கள் என்றால் கருப்பணன் மனைவி பனையம்மாள் அவருடைய மகனான மலைச்சாமி 11ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்துள்ளார். 10 முதல் 12 பிரதிவாதிகள் 13ம் பிரதிவாதி ராஜேந்திரனுக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனக்கு அதுபற்றி தெரியாது. மலைச்சாமி 11ம் பிரதிவாதிக்கும், 13ம் பிரதிவாதிக்கும், கருப்பணன் வாரிசுகள் சின்னசாமி மூலமாக அவர்களுக்கு கிடைத்த பாக சொத்தை தான செட்டில்மெண்டாக எழுதி வைத்துள்ளார்கள் என்றும் அது தெரிந்தும் தெரியாது என்று மறுத்து கூறுகிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி ராஜாங்கம், மாணிக்கத்தின் மகன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பாண்டியம்மாள், 3ம் பிரதிவாதி நடராஜன், 4ம் பிரதிவாதி நாகராஜன் ஆகியோர் சேர்ந்து அவருக்கு கிடைத்த பாகத்தை சின்னசாமி மூலமாக ராஜாங்கத்திற்கு கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மாணிக்கம் அவருடைய மனைவி அமராவதி, சொக்கநாதன் என்பவரிடம்

இருந்து கிரையம் பெற்ற சொத்தை தனது மகனான ராஜாங்கம் என்பவருக்கு தானமாக கொடுத்து அதை அவர் விஜயலதா என்னுடைய மனைவிக்கு விற்பனை செய்துவிட்டார். நான் தவறாக சொல்கிறேன் என்றும் மேற்படி சொத்தை அமராவதி கிரையம் வாங்கவில்லை என்றும், சின்னசாமி மூலமாக வாரிசு அடிப்படையில் அமராவதிக்கு கிடைத்த சொத்தை தனது மகனான 2ம் பிரதிவாதிக்கு தானமாக கொடுத்து அந்த சொத்தை எனது மனைவி பெயரில் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. 26.11.2014 அன்று சின்னசாமி வாயிலாக வாரிசு அடிப்படையில் கிடைக்கப்பட்ட சொத்துக்களை பொறுத்து பாகம் எதுவும் ஏற்படவில்லை என்று தான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சரிதான். 01.11.2004ல் அக்ரகாரம் தெருவில் மேலூரில் 1287 சதுர அடியை நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி ராஜாங்கத்தின் மனைவியான **ஸ்ரீ**தேவி பல்லவராயன்பட்டியில் 2156 சதுர அடியை கிரையம் பெற்றுள்ளாரா என்றால் ஆமாம் அது அவருடைய சுயசம்பாத்தியத்தில் வாங்கப்பட்ட சொத்து ஆகும். **ஸ்ரீ**தேவி பெயரில் கிரையம் பெற்ற சொத்து 12.08.2011 தேதியில் கிரையம் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் பெயரில் கிரையம் வாங்கப்பட்ட சொத்துக்களிலும் சரி, **ஸ்ரீ**தேவி கிரையம் வாங்கப்பட்ட சொத்துக்களிலும் சரி தற்போது காம்ப்ளக்ஸ் கட்டப்பட்டுவிட்டது என்றால் சரிதான். என் பெயரில் வாங்கப்பட்ட மனையிடம் **ஸ்ரீ**தேவி கிரையம் பெற்ற மனையிடம் என்மனைவி பெயரில் வாங்கப்பட்ட இடம் அவை அனைத்தும், சின்னசாமி வாரிசுக்களுக்கிடையே பாகபிரிவினை ஏற்படவில்லை என்பதால் 5 முதல் 9 பிரதிவாதிகளுக்கு பாக உரிமை இருப்பதாக எதிர்கோரிக்கை வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது ஆனால் அது தவறாகும். எதிர்கோரிக்கை வழக்கிற்கு நான் ஆட்சேபணையும் தாக்கல் செய்யாமல் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் எதிர்கோரிக்கை

வழக்கை பொறுத்து எவ்வித மறுப்பும் தெரிவிக்காமல் வழக்காடி வருவதால் எதிர்கோரிக்கை பரிகாரம் தவறானது என்று நான் தற்போது கூறுவது தவறானது என்றால் சரியல்ல. வழக்குக்கு முன்பாக 5 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் பதில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் தான் வா.சா.ஆ.15 என்றால் சரிதான். மேற்படி பதில் அறிவிப்பில் 14 இலக்க சொத்துக்கள் மட்டுமே கண்டுள்ளது என்றும், அதில் சின்னசாமி மூலமாக பாகபிரிவினைக்கு உகந்த சொத்துக்கள் என்றும் மற்ற இதர சொத்துக்கள் பொறுத்து அந்தந்தை கிரையதாரர்களுக்கு பாத்தியப்பட்டது என்றும் சொல்லப்பட்டுள்ள பிறகும், அதை மறுத்து வழக்குரையிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ நான் மறுப்பு தெரிவித்து சொல்லவில்லை என்றால் சொல்லியிருக்கிறோம். அதை வழக்கறிஞர் சேர்க்கவில்லை. 11, 13 மற்றும் 8ம் பிரதிவாதிகளான மலைச்சாமி, ராஜேந்திரன் மற்றும் சுப்பையா அவர்களது பெயரில் ஏற்பட்டிருக்ககூடிய ஆவணங்களில் எழுதிகொடுத்தவரின் தகப்பனார் மற்றும் அவருடைய கணவர் வழியில் அவர்களுக்கு கிடைத்தது என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.9 மற்றும் 10 ஆவணங்களில் அவ்வாறு கண்டுள்ளது என்றால் சரிதான். என் அப்பாவுடன் பிறந்த கருப்பணனனோ, அய்யங்காளையோ, மாணிக்கமோ, எப்பொழுதும் கூட்டுக்குடும்பத்தில் கர்த்தாவாக செயல்பட்டதில்லை என்றும், அவர்களது பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்பது அவரவர்க்குரிய தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. 1991ம் ஆண்டு சின்னசாமியின் வாரிசுகள் அனைவருக்கும் பாகம் ஏற்பட்டது ஆனால் பதிவு செய்யப்போகும் போது பிரச்சினை ஆகிவிட்டது. அதனால் பதியவில்லை. வா.சா.ஆ.15 பதில் அறிவிப்பில் 14 இன சொத்துக்கள் பொது குடும்ப சொத்துக்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி பாகபிரிவினைக்கு தயாரிக்கப்பட்ட பத்திரங்கள் என்னிடம் தான் உள்ளது. மேற்படி பாகபிரிவினைக்கு தயாரிக்கப்பட்ட

பத்திரமும்,அசல் பத்திரங்களும் என் வசம் தான் உள்ளது அதை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. (மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்வதற்காக வழக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2026.02.10 22:32:13 +0530

Sub Judge

Melur